RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s215

OPEN ACCESS

# மலர்வதியின் காட்டுக்குட்டி நாவலை முன்வைத்து விளிம்புநிலை உருவாக்கத்தில் காட்டுக்குட்டி

**க. சிந்து** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), திருநெல்வேலி-627008, தமிழ்நாடு, இந்தியா.

# Malarvati's Kaatkutti Novel in Marginal Creation

**K. Sindhu** [a, *]

[a] Department of Tamil, Rani Anna Government College For Women, (Affiliated to Manonmaniam Sundaranar University), Tamil Nadu, India

* Corresponding Author: ksindhu.1987@gmail.com

Received: 08-09-2022
Revised: 17-10-2022
Accepted: 24-10-2022
Published: 15-11-2022

**ABSTRACT**

In India, the human race is treated unequal due to many reasons such as birth, color, wealth, occupation, race and caste. Due to this kind of segregation, man is oppressed by a dominant power from time to time. Hence, there always exist oppressed, marginalized and alienated human beungs. Although literature has recorded the living conditions of these downtrodden people and social struggles they face, modern literature has recorded more about the struggles of marginalized women, women's status, and silenced women characters. In this way, Malarvathi'sKattkutti speaks about Ramani, who has struggled in her life. She becomes a sex worker. Similarly, the novel also focuses on Kutimani, the daughter of Ramani who suffers throughout her life. She faces many struggles in her life as she is born out of wedlock. The society never accepts her as one among them. The society does not call her by her name. But as Kattkutti. Because of this she undergoes many kinds of oppression in her life. The present paper explores the marginalization of women in Malarvathi'sKattukutty novel.

**Keywords:** Edge, Marginalized people, Neglect, Oppression, Sex worker

## முன்னுரை

இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலிகள். சமுதாயத்தின் வளர்ச்சியைக் காட்டும் மைல் கற்கள். மனித இலட்சியத்தின் உயிர்நாடி என்றெல்லாம் குறிப்பிடப்படுகிறது. " ஒரு சமூகம் நிலை பேறுடைய நிறுவனமாக இயங்குவதற்கும் எவ்வாறு இயங்கியுள்ளது என்பதை அறிவதற்கும் இலக்கியம் மிக முக்கியமானதாகும். இதனாலேயே இலக்கிய உருவாக்கமில்லாது சமூக உருவாக்கமில்லை." எனப் பேராசிரியர் றேமண்ட் வில்லியம்ஸ் (Raymond Williams) குறிப்பிடுவதாக கா. சிவத்தம்பி கூறுகிறார் (Sivathambi, 2012). இலக்கிய வகையின் நவீன உரைநடை வடிவம் நாவல் ஆகும். "மனிதனின் அன்றாட வாழ்க்கையில் இறைந்து கிடக்கும் தேவைகளை, தேவை மறுப்புகளை, ஆசைகளை, ஆசைக் கருக்கல்களை, உணர்வுகளை, உணர்வுப் பொசுங்கல்களை, அவலங்களை, நம்பிக்கை இழைகளை, கொடுமைகளை, குமுறலில் சிதறும் நெருப்புத் துண்டைங்களை, கோணங்களை, கோணங்களை நேராக்க முயலும் இணைப்புகளை எல்லாம் பன்முக அனுபவங்களாகத் தொலைநோக்கோடு எளிமையாகப் பலரது கருத்தையும் கவனத்தையும் ஈர்க்கும் விதத்தில் புலப்படுத்தும் ஆற்றல் மிக்க சாதனமே நாவல் இலக்கியமாகும்." என்கிறார் சேதுமணிமணியம். மனித உறவுகளில் ஏற்படும்

பலவகையான சிக்கல்களை நடப்பியல் உணர்வோடு காட்ட முயல்வதே நாவல் என்பதை அறியலாம் (Ramakrishnan, 1992). தற்கால நாவல்கள் சமூகத்தில் புறந்தள்ளப்பட்ட விளிம்புநிலை மக்களின் பதிவுகளை முன் வைப்பனவாகவே அமைந்துள்ளன. அந்த வகையில் மலர்வதியின் காட்டுக்குட்டி நாவலை முன்வைத்து விளிம்புநிலை உருவாக்கத்தில் காட்டுக்குட்டி என்ற தலைப்பில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## விளிம்புநிலை விளக்கம்

விளிம்புநிலை என்பது சமூகப் பொருளாதாரத் தர நிலைகளிலும், வாழ்க்கை ஓட்டத்திலும் பின்தங்கியவர்கள் ஆவார்கள். விளிம்புநிலை வாழ்க்கையில் எப்போது வேண்டுமானாலும் மாற்றம் நிகழலாம். பாதுகாப்பு இல்லாத சமூகத்தில் மதிப்பில்லாத ஒரு வாழ்க்கை நிலையையே விளிம்புநிலை சித்தரிக்கிறது. இப்படியான ஒடுக்கப்பட்டோர் என்னும் விளிம்புநிலை மக்களின் வாழ்வை ஆய்வதற்கு முன் விளிம்புநிலை என்னும் சொல்லின் விளக்கத்தையும் பொருளையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

### சொல் விளக்கம்

"ஒன்றின்பரப்பு முடியும் இடம். கத்தியின் விளிம்பு வெயிலில் மின்னியது. கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்திருந்தாள். கூரை விளிம்பிலிருந்து ஐந்து அடி தள்ளி ஒரு வேப்பமரம். அவன் துன்பத்தின் விளிம்பிற்கே போய் விட்டான். நீரில் விழுந்தவன் படகின் விளிம்பைப் பிடித்தப்படி மிதந்தான். குடத்தின் விளிம்பு வரை தண்ணீர் இருந்தது." என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி விளிம்பு என்ற சொல்லிற்கான விளக்கம் தருகிறன்றது (Ramakrishnan, 1992).

### பொருள் விளக்கம்

"விளிம்புநிலை என்னும் பொருள்படும் 'சபால்டன்' என்னும் சொல் வழக்கு முதன் முதலில் இத்தாலிய மார்க்சியலாளர் அன்டோனியா கிராம்ஸ்கியால் 1881-இல் அறிமுகம் செய்யப்பெற்றது. இனம், சமூகநிலை, பால், பாலின வேறுபாடு அல்லது கீழ்த்தளத்திற்குத் தள்ளப்பட்டுள்ள தனிமனிதர் அல்லது குழுவைக் குறிக்குறது." என்று விளிம்புநிலைக்கு அறிஞர் ஒருவர் விளக்கம் தருவதனைக் காணலாம்.

மேற்காணும் கூற்றுகள் வழி சமூகத்தின் பொதுவானப் போக்குகள் வாழ்க்கை முறைகள் போன்றவற்றிலிருந்து பெரும்பாலோரால் புறக்கணிக்கப்பட்டிருக்கும் நிலையையே விளிம்புநிலை என்று எண்ணுவதற்கு வழி வகுக்கிறது எனலாம்.

## விளிம்புநிலை எழுதுக்கள்

உலகெங்கிலும் 1960-களில் ஏற்பட்ட அரசியல் மற்றும் கருத்தியல் மாற்றங்கள் மனித குல வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளதோடு பண்பாட்டு அதிர்வுகளையும் ஏற்படுத்தி உள்ளன. ஒடுக்கப்பட்ட மாந்தர்களை அடையாளப்படுத்துகின்ற விளிம்புநிலை எழுத்துகள் அத்தகைய வரலாற்றுப் பின்னணியிலே தடம் பதித்துள்ளன. இதனால் தான் அதிகார மையங்களை விட்டுத் துரத்தியடிக்கப் பெற்ற விளிம்புநிலை மந்தார்களின் இருப்புநிலையைக் கண்டறிவதும், நிகழ்கால எழுத்துகளில் அவர்களின் தன்னிலையை உறுதி செய்வதும் தவிர்க்க முடியாததாகிறது.

இரண்டாயிரத்துக்குப் பிந்தைய நாவல் உலகமானது "நாவலாசிரியர்கள் கவனிக்க தவறிய நவலாகாது, கலையாகாது, உன்னத இலக்கியமாகாது என்று பொது சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட, ஒதுக்கித்தள்ளப்பட்ட, முகம் சுளித்த விலக்கி வைக்கப்பட்ட மனிதர்களும், அவர்களுடைய வாழ்க்கையும் மொழியும் தான் இன்று தமிழ் நாவல்களாக தமிழ் நாவல் இலக்கியமாக கலையாக

இருக்கிறது." என்று நாவலாசிரியர் இமையம் அவர்கள் கூறுகின்றார். அவ்வகையில் காட்டுக்குட்டி நாவலில் விளிம்புநிலைப் பெண்களின் வாழ்க்கை நிலையினை மலர்வதி தன் எழுத்துகளில் பதிவு செய்திருப்பதனைக் காண முடிகின்றது.

## விளிம்பும் மையமும்

சமநிலை இல்லாத மனிதக் கூட்டத்தில் ஒடுக்கப்பட்டோர்கள் இருப்பார்கள் என்றால் ஒடுக்குபவரும் இருப்பார்கள். இதனை இலக்கிய உலகம் விளிம்பு, மையம் என குறித்து வருகிறது. வாழ்க்கையின் வசதிக்காக சூழலைத் தன்வசம் வைத்துக் கொண்டு இருப்பவர்கள் மையநிலை மக்கள் என்றும், அவர்களால் வாழ்க்கை வசதிகளைப் பறிகொடுத்து வாழ்வின் கடைநிலையில் இருப்பவர்கள் விளிம்புநிலை மக்கள் என்றும் கூறலாம்.

விளிம்பு, மையம் குறித்து மணிகோ. பன்னீர்செல்வம், "பால், சாதி, நிறம், நிறுவனம் போன்ற கூறுகளால் புவியியல், அரசியல், கருத்தியல், கலாச்சாரம், போன்ற தளங்களில் கீழ்நிலைப்படுத்தப்பட்ட சக்திகள் விளிம்புகள் என்றும் அதிகாரங்கள் குவிந்துள்ள சக்திகள் மையங்கள் என்றும் கருத்தப்படுகின்றன." என்று குறிப்பிடுகின்றார் (Ramakrishnan, 1992). இவ்வாறாக ஒடுக்குபவர்கள் மையம் என்றும், ஒடுக்கப்படுபவர்கள் விளிம்பு என்றும் அறிந்து கொள்ள முடிகிறது.

## விளிம்புநிலை மக்கள்

விளிம்புநிலை மக்கள் Marginalized People என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் மிகுதியும் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். இம்மக்கள் சாதியினாலும் சமயத்தினாலும் பலவித ஒடுக்கமுறைக்கும் சுரண்டலுக்கும் ஆளாகித் தலைமுறைத் தலைமுறையாத் துன்புற்று வருகிறார்கள். மேலும் இவர்கள் நிலங்கள் ஏதுமற்று வசதி படைத்த உயர் சாதியினரின் கீழ் கூலிவேலை செய்து வாழ்க்கை நடத்துகின்றனர்.

"சமூக ரீதியாகவும், பிறப்பு ரீதியாகவும், இழிவாகக் கருதி அவர்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் நசுக்கி சமுதாயத் தளத்தில் ஒதுக்கித் தள்ளும் வர்க்கம் சார்ந்த மக்களே விளிம்புநிலை மக்கள்."

"விளிம்புநிலைக்குழு என்பது பெருந்திரள் சமூகத்துடன் ஒத்து போகாது சமூகப் பொது ஓட்டத்திற்கு அப்பாற்பட்ட நிலையினராவர்." என்று விளிம்புநிலை மக்கள் குறித்து மணிகோ. பன்னீர்செல்வம் விளக்கம் தருகிறார். இக்கூற்றுகள் வழி விளிம்புநிலை மக்கள் என்போர் அடித்தள மக்களை விட கீழானவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது (Ramakrishnan, 1992).

இந்நிலையில் இயங்கக் கூடியவர்களான பழங்குடிகள், நாடோடிகள், திருநங்கைகள், அகதிகள், நிரந்தர நோயாளிகள், பாலியல் தொழிலாளிகள், பிணம் எரிப்பவர்கள், துப்புரவு தொழில் செய்பவர்கள், ஆடு மேய்க்கும் நாடோடிகள், ஓரினப் புணர்ச்சியாளர்கள் போன்றோர் விளிம்புநிலை மக்களாக அறியப்படுகின்றனர்.

## விளிம்புநிலைப் பெண்கள்

விளிம்புநிலை மக்களை 3 நிலைகளில் பிரித்து கூறலாம். அவை, 1. விளிம்புநிலை ஆண்கள், 2. விளிம்புநிலைப் பெண்கள், 3. விளிம்புநிலைக் குழந்தைகள் என்பனவாகும். இந்த மூன்று நிலை மக்களில் விளிம்புநிலைப் பெண்களே அதிக ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றனர்.

விளிம்புநிலை மக்கள் பிரிவில் அடங்கும் விளிம்புநிலைப் பெண்களில் பாலியல் தொழிலாளிகளான ரமணி, மகாராணி மற்றும் ரமணியின் மகள் குட்டிமணி ஆகியோரை குறித்து பேசுவனவாக மலர்வதியின் காட்டுக்குட்டி நாவல் அமைந்திருப்பதனை காண முடிகின்றது.

## தொழில்களும் விளிம்புநிலை உருவாக்கமும்

தொழில் அடிப்படையாகக் கொண்டு அதன் காரணமாக உருவாக்கம் பெறும் விளிம்புநிலை பெண்கள் குறித்து காட்டுக்குட்டி நாவல் பதிவு செய்வதனைக் காணலாம். உலகில் பல வகையானத் தொழில்கள் உள்ளன. "தொழில்களைப் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் சமூகவியலாளர்கள் ஐந்து வகையாகப் பிரிக்கின்றனர். அவை, 1. முதல் நிலைத் தொழில்கள், 2. இரண்டாம் நிலைத் தொழில்கள், 3. மூன்றாம் நிலைத் தொழில்கள், 4. நான்காம் நிலைத் தொழில்கள், 5. ஐந்தாம் நிலைத் தொழில்கள்" என்பனவாகும்.

மேற்குறிப்பிட்டுள்ள ஐந்து நிலைத் தொழில்களும் முறைசார் தொழில்கள் பிரிவில் அடக்கம் பெறுகின்றது. "முறைசார் வேலைவாய்ப்பில் ஊழியர் தொழிலாளர் விஷயங்களில் சட்டத்தை நிறுவப்பட்ட பாதுகாப்பு மற்றும் நன்மைகள் பெறுகிறது அதன்படி, முறையாக தொழிலாளி மற்றும் முதலாளி இடையே ஒரு வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தின் முடிவில் முறைப்படுத்தப்பட்டது." என்ற கூற்றிலிருந்து முறைசார் தொழில் என்பது முறையான தொழில் அமைப்பை கொண்டு இயங்குவது என்பதனை அறிய முடிகின்றது (Malarvathi, 2017).

"முறைசாரா வேலைவாய்ப்பு என்பது சுயாதீன தொழிலாளர்கள், தெரு விற்பனையாளர்கள், வீட்டு சேவை ஊழியர்கள், துப்புரவாளர்கள் போன்ற தொழிலாளர் செயல்பாட்டைக் குறிக்கிறது. இந்த வகையான வேலைகள் பொதுவாக மோசமான வேலை நிலைமைகளை வழங்குகின்றன. கூடுதலாக, தொழிலாளர்களுக்கு சட்டப் பாதுகாப்பு இல்லாததால் அவை சமூக பாதுகாப்பு இல்லாத வேலைகள், அவை தொழிலாளர்களுக்கு பொருளாதார ஸ்திரத் தன்மையை வழங்காது." என்பதிலிருந்து மேலே கூறப்பட்ட ஐந்து நிலைத் தொழில்களைத் தவிர பிற தொழில்கள் செய்பவரை விளிம்புநிலைத் தொழிலாளிகள் என்றே நோக்க வேண்டியுள்ளது.

முறைசாரா தொழில்களான, கல் உடைக்கும் தொழில், கட்டிட வேலைத் தொழில், திருட்டுத் தொழில், துப்புரவுத் தொழில், வீட்டு வேலைத் தொழில், வெட்டியான் தொழில், ஆடு மேய்த்தல், பிச்சையெடுத்தல், பாலியல் தொழில், கலைத்தொழில் போன்ற இன்னும் பல தொழில்களை செய்பவர்கள் விளிம்புநிலை மக்களாக அடையாளப்படுத்தப்படுகின்றனர். அந்தவகையில் மலர்வதியின் காட்டுக்குட்டி நாவலில் வரும் ரமணியும், மகாராணியும் தொழில் காரணமாகவே பிறர் ஒதுக்கி வைக்கும் விளிம்புநிலைப் பெண்ணாக உருவாக்கம் பெறுவதனை காணமுடிகின்றது.

## பாலியல் தொழிலாளி

மலர்வதியின் 'காட்டுக்குட்டி' நாவலில் வரும் ரமணி காதலில் ஏமாற்றப்பட்டு கையில் குழந்தையோடு சமூகத்தால் புறம்தள்ள படுகின்றாள். குழந்தைக்கு தந்தையை தேடும் முயற்சியில் அவள் பாலியல் தொழிலாளியாக உருவாக்கம் பெறுகின்றாள். "ஊரிலுள்ள தங்கப்பன் என்பவனின் இளைய மகன் ராயனைக் காதலித்து வயிற்றில் பிள்ளை வாங்கிக் கொண்டாள் அவள் ஏமாற்றமாகப் பெற்ற மகள் குட்டிமணியோடு இன்றுவரை தனியாக வாழ்கிறாள். தனது வாழ்வின் அவலங்களை நினைத்தாள். இத்தனை தரம் தாழ்ந்து போவதற்கு அவள் தான் காரணம். அறியா வயதில் அவன் கொடுத்த முத்தம், அவன் அரவணைப்பு, அதில் வந்த குழந்தை, அதற்கு ஒரு தந்தை என்ற தேடல் இப்படியொரு அவலத்திற்கு அவளைத் தள்ளியது." இவ்வாறு காதலனால் ஏமாற்றப்பட்ட ரமணி பாலியல் தொழிளியாக உருவாக்கம் பெற்றதனை அறிய முடிகின்றது (Malarvathi, 2017).

அடுத்ததாக மாகராணி என்ற பெண், தன் காதல் கணவன் கட்டிட வேலைக்கு சென்ற இடத்தில், கட்டிடத்திலிருந்து கீழே விழுந்து உடல்நிலைச் சரி இல்லாமல் போன காரணத்தினாலும், தன்னுடைய குழந்தையை வளர்க்க போதுமான வருமானம் இல்லாத காரணத்தினாலும் பாலியல் தொழிலாளியாக உருவாக்கம் பெற்றதனை, "சினேகிச்சி கெட்டுன மாப்பிள்ளை படுத்த படுக்கையாக் கெடக்குறத பாக்க ஒக்கேல. அவருக்க கண்ணு காண மாப்பிளைப் பிடிச்சப் போறதை பார்த்துட்டே கிடைக்கிய அவரையும் கொன்னுடு நானும் செத்துப் போக்கு தோணுது. ஆனா எனக்கு ஒண்ணர வயசுல ஒரு மொவன் இருக்கியான். அதான் பிடிச்சு பிடிச்சு நிக்கியேன்." என்ற கூற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

இவ்வாறு தொழில் ரீதியாக உருவாக்கம் பெற்ற விளிம்புநிலைப் பெண்களான ரமணி, மகாராணி குறித்து நாவல் வழி தெரிந்து கொள்ள முடிந்தது. அடுத்ததாக பிறப்பு காரணமாக விளிம்புநிலை உருவாக்கம் பெறும் பெண் குறித்து நாவல் வழி ஆராயப்படுகிறது (Malarvathi, 2017).

## பிறப்பும் விளிம்புநிலை உருவாக்கமும்

குட்டிமணி பாலியல் தொழில் செய்யும் ரமணிக்கு பிறந்த பெண் என்ற காரணத்தினால், அவளை சமூகம் தவறான கண்ணோட்டத்துடன் பார்ப்பதனை நாவல் பதிவு செய்துள்ளது. குட்டிமணி வேலை செய்யும் பாத்திரக்கடையின் முதலாளி அவளிடம் தவறாக நடந்து கொள்ள முயல்வதனை, "ஒனட்ட பல தடவை சொன்னப்பிறகும் ஒனக்கு ஏன் புத்தி வரேல. நீ ஏதோ நல்ல குடும்பத்துல பிறந்து வளந்து ரோசமா வாழ்வது போல சீனு காட்டிய? ஒனக்கு கொம்மையிட்ட கூட நான் பலத்தடவை வந்துருக்குக்கேன். நான் கொடுத்த பணத்துல நீயும் தின்னுருப்ப. எப்படிதான் நீ உன்ன ஒழுக்கமா காட்டியிட்டாலும் கொம்மையப் போலத்தான் ஒனக்கும் சீவிதம் அமையும். வருங்காலம் ஒரு பழக்கத்துக்கு இருக்கட்டு எனக்க கூட அனுசருணையா இருண்ணா நீ ஏன் கேக்க மாட்டுற. அவன் கண்கள் சிவந்தேற அதில் காமம் மிதப்பதை பீதியுடன் பார்த்தாள் அவள்." என்ற கூற்றுவழி நாவல் பதிவு செய்வதனைக் காணலாம் (Malarvathi, 2017). மேலும் தந்தை பெயர் தெரியாத காரணத்தினால் குட்டி மணியை அனைவரும் காட்டுக்குட்டி என்றே அழைக்கின்றனர். இனி அது குறித்த விளக்கத்தினை காணலாம்.

## காட்டுக்குட்டி - பெயர் விளக்கம்

ரமணி தன் காதல் வாழ்க்கையில் தோல்வியை தழுவிய காரணத்தினால், குட்டிமணி என்ற ஒரு பெண் குழந்தையினை பெற்றெடுக்கிறாள். அந்த குழந்தையினை, ரமணியைச் சுற்றியுள்ள சமூகம் காட்டுக்குட்டி என்று பெயர் சொல்லி அழைப்பதனை நாவல் பதிவு செய்கின்றது. "எனக்க பதினைந்து வயசுல அறியாப் பருவத்துக் காதலுல கல்யாணம் ஆகாம பெத்தவா இல்லியா எனக்க மொவா. அவா அப்பனை எனக்குத் தெரியும். தங்கப்பனுக்க இளைய மகன் ராயன் தான் எனக்க மொவளுக்க அப்பன். ஆனா அவனும் அதை ஏத்துக்கல. இந்த உலகமும் அதை ஏத்துக்கல. அதனால எனக்க மொவா அப்பன் பேரு தெரியாத காட்டுக் குட்டியாகிப் போனா." என்ற கூற்றின் வழி காட்டுக் குட்டி என்பது அப்பன் பெயர் தெரியாமல் பிறக்கும் குழந்தை மீது சமூகம் சுமத்தும் அவப்பெயர் என்பதையும் நாவல் வழி உணர்ந்து கொள்ள முடிகின்றது (Malarvathi, 2017). மேலும் இந்த காட்டுக்குட்டி என்ற சொல்லினை ஒரு சமூகம் மட்டுமே பயன்படுத்துவதனையும் அறிந்து கொள்ளமுடிகின்றது. விளிம்பு நிலை உருவாக்கம் பெற சமூக காரணிகளாக இருப்பவை குறித்து இனி விளக்கப்படுகிறது.

## சமூகக் காரணிகள் விளக்கம்

சமூகக் காரணிகள் என்பன குடும்பம், பொருளாதாரம், சுகாதாரம், செயல்பாடு போன்ற பல்வேறு துறைகளில்குறிப்பிடபட்ட சமூக மாறுதலை உண்டாக்கும் விந்தை அல்லது செயல்முறை. சமூக காரணிகள் என்பன சமூகத்தின் கூறுகள் ஆகும். அவை நேர்மறை மற்றும் எதிர்மறை செல்வாக்கை வெளிப்படுத்துகின்றன. அவை அதன் கூறுகள், அமைப்பு, செயல்பாடு மற்றும் நோக்குநிலை ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. ஒரு சமூகத்தின் சமூகவியல் நிலையை பாதிக்கக் கூடிய எந்தவொரு கூறுகளும் ஒரு சமூக காரணியாகும். மொத்தத்தில் ஒரு சமூகத்தின் சமூகவியல் நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கூறுகளே சமூகக் காரணிகள் ஆகும். அந்த வகையில் விளிம்புநிலை மக்கள் உருவாக்கம் பெறவும் சில சமூகக் காரணிகள் இருப்பதனை, ஆய்வுக்குட்பட்ட நாவல் வழி அறிய முடிகிறது. அப்படியான சமூகக் காரணிகள் குறித்து காணலாம்.

## விளிம்புநிலை உருவாக்கமும்-சமூகக் காரணிகளும்

காட்டுக்குட்டி நாவலில் விளிம்புநிலை உருவாக்கம் பெற சமூகக் காரணிகளாக இருப்பனவாக 2 நிலைகளைக் கூறலாம்.அவை, 1. வறுமை, 2. பிறப்பு

என்பனவாகும்.

## வறுமை

"வறுமை என்பது மனித நிலைப்பட்ட வாழ்வுக்கு வேண்டிய பொருளியல் தேவையாகும். உயிரோடுச் சிவீப்பதற்கு வேண்டியவையிருப்பினும் அச்சமூகத்தில் பெரும்பான்மையான கூட்டத்தினர் நியாயமான, செம்மையான வாழ்க்கையை நடத்துவதற்கு அத்தியாவசியமானவையெனக் கருதுவன இல்லையெனில் அந்நிலையை வறுமை நிலை என கொள்வதுண்டு." என்கிறார் (Sivathambi, 2012).

கணவனுக்கு உடல்நிலைச் சரியில்லாத காரணத்தினால் வீட்டின் அன்றாட தேவைகளைக் கூட நிறைவேற்ற இயலாத மகாராணி. பாலியல் தொழிலாளியாக உருவாக்கம் பெற்றதனை மலர்வதியின் காட்டுக்குட்டி நாவல் பதிவு செய்கின்றது. "வேண்டாம் கிரிசாளே... என்னை கொண்டு களியேல. அம்பதோ நுறோ எறிஞ்சிட்டு போறவனை வச்சி எனக்கு ஒக்கேல. இல்லட்டி கேட்டுத்தான் கூட்டியிட்டு வந்தேன். இங்கேரு கையில அய்நூறு வேண்டியிட்டேன். அவள் விரித்துக் காட்டிய அந்த மஞ்சள் நோட்டை ஆர்வமுடன் பார்த்தாள். மகனுக்கு பால், சர்க்கரை, கணவனுக்கு மருந்து, ஒரு நேரமாவது கிடைக்கும் உணவு போ போய் வரச்சொல் அவள் தன் மகனை கிரிசாவிடம் கொடுத்து விட்டு முண்டு வைத்து மறைத்திருந்த மறைவில் சென்றாள்" என்ற கூற்றின் வழி வறுமையானது பெண்ணை பண்பாட்டுத் தளத்திலிருந்து மாற்றி (Malarvathi, 2017).

"நல்லொழுக்கமுள்ள குடும்பப் பெண் 'குலமகள்' எனவும், குடும்பப் பண்புகளுக்குள் அடங்காமல் உடலை விற்கும் பெண்கள் விலைமகளிர்." எனும் கூற்றிற்கு ஏற்ப குலமகளான மகாராணி வறுமை காரணமாக விலை மகளிர் எனும் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டதையும் இதனால் இப்பெண்கள் சமூக மதிப்பிழந்து வாழ்வதையும் நாவலில் பார்க்க முடிகின்றது (Narmadha, 2006).

## பிறப்பு

ரமணி என்ற பாலியல் தொழில் செய்யும் பெண்ணுக்கு பிறந்த காரணத்தினால் குட்டி மணியையும் சமூகம் அதே பார்வையில் பார்த்து ஒதுக்கி வைக்கின்றது. இதனை உணர்ந்த குட்டிமணி, ரமணியிடம் தன் நிலையினை உரைப்பதனை, "என்னை நீ எம்புடு பொத்தினாலும் ஒனக்க அதே வாழ்கைத் தான் எனக்கு கிடைக்கும். ஒனக்கு வேசயிண்ணு கிடைச்ச அதே அடையாளம் தான் எனக்கும் கிடைக்கும். காலம் போம்ப எனட்டயும் நூறு அம்பதுண்ணு தந்துட்டு வரத்தான் போறானுவா, ரேசன் வேண்டக்கும், மரக்கறி வேண்டக்கும், அந்த சக்கறம் ஒதவத்தான் போகுது, ஒன் ஒருத்தியால எனக்க சீவிதமும் கழுதைப் போல ஆகுது." என்ற கூற்று பாலியல் தொழில் செய்யும் ரமணிக்கு பிறந்த பெண்ஆகையால் குட்டி மணியையும் சமூகம் தவறாக நோக்குவதனையும், அதனால குட்டிமணி வருந்துவதனையும் நாவல் வழி அறிய முடிகின்றது. இவ்வாறு பிறப்பின் காரணமாகவும், வறுமை காரணமாகவும் விளிம்புநிலை உருவாக்கம் பெற்றபெண்கள் குறித்து அறிந்துகொள்ள முடிகின்றது (Malarvathi, 2017).

## முடிவுரை

சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்பட்டு வாழ்ந்து வரும் மக்கள் விளிம்புநிலை மக்களாக அறியப்படுகின்றனர். ஒடுக்குபவர்கள் மையமாகவும், ஒடுக்கப்படுபவர்கள் விளிம்பாக இருப்பதனையும் அறியமுடிகின்றது. விளிம்புநிலை மக்களை விளிம்புநிலை ஆண்கள், விளிம்பு நிலை பெண்கள், விளிம்பு நிலை குழந்தைகள் என்ற மூன்று வகையில் பிரித்து அறியலாம்.

ஆய்வுக்குட்பட்ட மலர்வதியின் காட்டுக்குட்டி நாவல் விளிம்புநிலைப் பெண்கள் குறித்து கூறுவனவாக அமைந்திருப்பதை காணலாம். தொழில் ரீதியாக ஓரங்கட்டப்படும் விளிம்புநிலை மக்களில் பாலியல் தொழில் செய்வதனால் ரமணி மற்றும் மகாராணி விளிம்புநிலை உருவாக்கம் பெறுவதனை அறிய முடிகின்றது. பாலியல் தொழிலாளியான ரமணிக்கு பிறந்த பெண்ணாக குட்டிமணியும் பிறப்பை காரணமாக வைத்து விளிம்புநிலைக்கு தள்ளப்படுவதனை காண முடிகின்றது. குட்டிமணி முறை தவறி பிறந்த காரணத்தினால் அவளை அனைவரும் காட்டுக்குட்டி என்று அழைப்பதனை அறியலாம். விளிம்பு நிலை உருவாக்கம் பெறும் சமூகக்காரணிகளாக காட்டுக்குட்டி நாவலில் வறுமை, பிறப்பு இருப்பதனை அறிய முடிகின்றது.

## References


Malarvathi, (2017) Kattukutti, Kilakku Pathippagam, New Century Book House, Chennai, India.

Narmadha, (2006) Devaradiyaar Marpu panmuga nokku, Pothu vanam, Chennai, India.

Rajukumar, H.P. (1982) Tharkaala tamil Ilakkiyangalil Varumaiyum Sadhiyamum, Chirshuwa ilakkiya sangam, Chennai, India.

Ramakrishnan, S. (1992) Kiravim Tharkaala tamil agarathi, Kiraya, Chennai, India.

Sivathambi, K. (2012) Tamil Ilakkiyathil Mathamum Manudamum, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License